DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.100/2022**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.3

Defence

Court

Name : டாக்டர்.சுதா
Father/ Husband Name : செங்கதிர்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 27.09.2024.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் தற்போது தேவகோட்டை அரசு மருத்துவமணையில் உதவி மருத்துவராக பணிப்புரிந்து வருகிறேன். கடந்த 28.11.2021ம் தேதி மாலை 6.50 மணியளவில் பணியில் இருந்த போது அ.சா. 1 சுமித்ரா என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை தனது கணவர் அன்றைய தினம் மாலை 6.00 மணியளவில் தன்னை அடித்ததாக சொன்னார். அவருக்கு இடது தோள்பட்டையில் வலி இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்ப்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **(அ .சா.1 விபத்து பதிவேடு மற்றும் அதன்பின்புறம் காயத்தின் தன்மை அடங்கிய சான்று அ.த.சா.ஆ.2)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அன்றைய தினமே 6.50 மணியளவில் சுதாகர் சிகிச்சைக்காக வந்தார் தன்னை அக்கா கணவர் மாலை 6.00 மணியளவில் வீட்டில் வைத்து் அடித்தாக சொன்னார்.

2. அவருக்கு இடது முட்டியில் சிராய்பு காயம் இருந்தது. வலது மூழங்காலில் சிராய்பு காயம் இருந்தது. அவருக்கு ஏற்ப்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **(அ.சா.2 விபத்து பதிவேடு மற்றும் அதன்பின்புறம் காயத்தின் தன்மை அடங்கிய சான்று அ.த.சா.ஆ.3)**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா.1 சுமித்ரா தனக்கு இடது தோள்பட்டையில் வலி இருப்பதாக பொய்யாக சொல்வதற்கு வாய்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. சாட்சி சுதாகருக்கு காயச்சான்றிழ் குறிப்பிட்டுள்ள காயங்கள் அவராக படிக்கட்டில் இடறி விழுந்தால் ஏற்ப்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. போலீசார் என்னை விசாரிக்கும் போது முகம் தெரிந்த நபர்கள் அடித்ததாக அ.சா.1 மற்றும் சாட்சி சுதாகர் என்னிடம் சொன்னதாக சொல்லியுள்ளேனா என்றால் 1நபர் தாக்கியதாக தான் சொன்னேன். போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் 28.11.2021ம் தேதி விசாரித்தார்கள்.

**மறு விசாரணை :** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.